## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லங்கா கவர்ன்மென்ட் இன்போர்மேசன் இன்பிராஸ்ட்ரக்சர் (பிறைவட்) லிமிட்டெட் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் சகல பதவியணியினர்களும் 2023 யூன் 01 ஆம் திகதி முதல் தாய்க் கம்பனியான இன்போர்மேசன் கொமியுனிக்கேசன் டெக்னொலொஜி ஏஜென்சி ஒப் ஸ்ரீலங்கா (பிரைவட்) லிமிட்டெட் கம்பனியுடன் இணைத்ததன் காரணமாக பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 5,078,752 ஆன மீதி திரண்ட மீதியில் சீராக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 07 ஆம் பந்தியின் நியதிகளுக்கு இணங்கும் வகையில் ஏனைய விரிவான வருமானக் கூற்றில் சீராக்கியதன் காரணமாக மீளாய்வாண்டின் விரிவான வருமானம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஊழியர்கள் மாற்றப்பட்டதன் காரணமாக பணிக்கொடை ஏற்பாடுகள் பூச்சியப் பெறுமதியாகக் காண்பித்து வேறுபாடுகள் LKAS 8 இன் கீழ் காண்பிக் கப்படாதிருந்ததுடன் அதனால் மீள் சீராக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நிமயத்தின் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றில் சீராக்க வேண்டிய மீதி மாத்திரம் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற தாய்க் கம்பனியின் (இன்போர்மேசன் கொமியுனிக்கேசன் டெக்னொலொஜி ஏஜென்சி ஒப் ஸ்ரீலங்கா (பிரைவட்) லிமிட்டெட்) இன் பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி இன்போர்மேசன் கொமியுனிக்கேசன் டெக்னொலொஜி ஏஜென்சி ஒப் ஸ்ரீலங்கா (பிரைவட்) லிமிட்டெட் உடன் ஒன்றிணைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 30 வரை அந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கணக்குகளின் தாமதத்தின் காரணமாக ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தது. | முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு தாய்க் கம்பனியில் இருந்து (இன்போர்மேசன் கொமியுனிக்கேசன் டெக்னொலொஜி ஏஜென்சி ஒப் ஸ்ரீலங்கா (பிரைவட்) லிமிட்டெட்) கிடைக்கவேண்டிய மீதி ரூபா 44,001,286 ஆக இருந்ததுடன் அது 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ICTA, LGII நிறுவனத்தை ஒன்றிணைப்பதன் ஊடாக இந்த உள்ளக கம்பனியின் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு ICTA திட்டமிட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133(1) ஆம் பிரிவு | சுட்டத்தின் பிரகாரம் கலண்டர் ஆண்டின் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு தடவை பங்கு உரிமையாளர்களின் வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் கம்பனி வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தியிருக்க வில்லை. | 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் தாமதத்தின் காரணமாக வருடாந்த பொதுக் கூட்டம் (AGM) நடாத்துதல் தாமதத்திற்கு காரணமாக இருந்தது. | சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவனத்தைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான வழிகாட்டியின் 2.2.2 ஆம் பந்தி | பணிப்பாளர் சபைக் கூட்டம் ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை முறையாக நடாத்த வேண்டியிருந்தமை கம்பனியின் தலைவர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் கம்பனி 02 பணிப்பாளர் சபைக் கூட்டங்களை மாத்திரம் நடாத்தி இருந்தது. | LGII பணிகள் ICTA இன் டிஜிட்டல் சேவை பிரிவிற்கு மாற்றப்பட்ட மையால் எந்தவொரு செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. அதற்கு இணையாக LGII ICTA உடன் ஒன்றிணைந்துக் கொள்வதற்கு உத்தியோகபூர்வ ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் தற்போது ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப டுகின்றது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவனத்தைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான வழிகாட்டியின் 2.3 ஆம் பந்தி | கம்பனி மீளாய்வாண்டிற்காக பாதீட்டு தயாரித்திருக்க வில்லை. | LGII இன் ஊழிய படையணியை உள்ளடக்கிய ஊழியர்கள் ஏழு பேர்கள் மாத்திரம் ஆக இருந்ததுடன் LGII செயற்பாடுகளில் ICTA இன் டிஜிட்டல் சேவை அமைப்பதன் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளமைய ால் அவர்கள் சார்ந்த கிரயம் ICTA பாதீட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. | வழிகாட்டியின் பிரகாரம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட ல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் பூச்சியமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,133,248 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,133,248 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கமபனியின் பதவியணியினர் கிரயம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி 2023 மே 31 ஆந் திகதி நடைபெற்ற தாய்க் கம்பனியின் (இன்போர்மேசன் கொமியுனிக்கேசன் டெக்னொலொஜி ஏஜென்சி ஒப் ஸ்ரீலங்கா (பிரைவட்) லிமிட்டெட்) பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகரித்தல் மாத்திரம் நான்கு | இந்தத் தீர்மானம் தீர்க்கப்படாதிருந்த நிதிக் கணக்குகளினால் ஏற்பட்டிருந்த ஒன்றிணைக்கும் செயற்பாடுகளில் தாமதம் மற்றும் LGII ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்தாமல் ICTA ஊழியர்களுக்கு சம்பளம் | கம்பனியின் பணிப்பாளர் சபையினது அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பேர்களையுடைய கம்பனியின் பதவியணியினர் தாய்க் கம்பனியின் பதவியணியினருடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தனர். | செலுத்துவதை வரையறுப்பதற்காக தொழில்நுட்ப அமைச்சிற்கும் (MOT) அறிவிக்கப்பட்டதனால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். | |

**3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியின் இலக்கம் 0072839158 என்ற வங்கிக் கணக்கில் வங்கியில் ரூபா 350,742 மீதி 2020 திசெம்பர் 31 முதல் மூன்று வருட அளவிலான காலம் பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி 2024 மார்ச் 18 ஆந் திகதி ICTA இற்க மாற்றப்பட்டுள்ளது. | நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 திசம்பர் 14 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ 55 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை 15 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | LGII ICTA உடன் ஒன்றிணைப்பதற்கு உத்தியோகபூர்வ ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது. அதன் செயற்பாடற்ற நிலையின் கீழ் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை கோருதலுக்கான தேவை ஏற்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |